பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 125

திங்கட்கிழமை
31 மார்ச் 2025

பங்குனி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## மலேரியாத் தொற்றுடன் ஒருவர் சிகிச்சையில்

யாழ்ப்பாணம், மார்ச் 31
மலேரியாத் தொற்றுக்குள்ளான ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ☞11

## காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 3 மாதக் குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 31
காய்ச்சலுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 3 மாதக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.
திருநெல்வேலி, கலாசாலை வீதியைச் சேர்ந்த மகிபன் மதுரன் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது. கடந்த 26ஆம் திகதி குழந் ☞11



சர்வதேச விமான நிலையமாக

# 4 மாதங்களில் தரமுயரும் யாழ். விமான நிலையம்

சிவில் போக்குவரத்து அமைச்சர் பிமல் உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணம் விமான நிலையம் நான்கு மாதங்களுக்குள் சர்வதேச விமான நிலையமாக மாற்றப்படும். முந்தைய அரசாங்கங்களைப் போன்று நாம் பொய்கூறமாட்டோம் என்று தெரிவித்துள்ளார் சிவில் போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க. ☞10

## 'ஈஸ்டர்' தாக்குதல் மர்மம்; ஏப்.21க்கு முன்னர் விலகும்

பொறுப்புக்கூறவேண்டியோர் விவரம் வெளியாகும்
அடித்துக் கூறுகின்றார் ஜனாதிபதி அநுர



கொழும்பு, மார்ச் 31
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துக்கு பொறுப்புக் கூறவேண்டிய குழுவின் பெயர் விவரம் எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் பகிரங்கப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.
உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஊழல், மோசடிகள் ☞11

## யாழ். – திருச்சி இடையே விமானசேவை ஆரம்பம்

47 ஆண்டுகளின் பின்னர் நேற்று வந்தது விமானம்

யாழ்ப்பாணம், மார்ச் 31
தமிழ்நாடு திருச்சிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான நேரடி விமான சேவை 47 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று ஆரம்பமாகியுள்ளது.
போருக்குப் ☞10

## விபத்தில் சிக்கிய பெண் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 31
விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த பெண் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.
கைதடியைச் சேர்ந்த ☞11

## தேர்தல் விதிமீறல்; முறைப்பாடு பதிவு

யாழ்ப்பாணம், மார்ச் 31
வலிகாமம் மேற்கில் நடைபெற்ற தந்தை செல்வா விருது வழங்கும் நிகழ்வில் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளரால் தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில் உதவித் திட்டங்கள் வழங்கப்பட்ட போது தேர்தல் விதிமுறைகளை மீறி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் ☞12

## கழிவு அறவிடுவதைத் தடுப்பதற்கு விவசாய சம்மேளனத்துக்கு சந்தை

ஆளுநருடனான கூட்டத்தில் யோசனை

யாழ்ப்பாணம், மார்ச் 31
விவசாயச் சம்மேளனங்கள் சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பதன்மூலம் சந்தைகளில் விவசாய உற்பத்திப்பொருள்களுக்கு 10 சதவீதக் கழிவுகள் அறவிடப்படும் பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கு இடையிலான மார்ச் மாதத்துக்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடை ☞11

## விபத்தில் முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 31
விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த முதியவர் ஒருவர் உயிரிழந் ☞11




## சிறுமியுடன் நைசாகப் பேசி சங்கிலி அறுத்த பெண்கள்

வவுனியா, மார்ச் 31
வவுனியா நகரசபைப் பூங்காவில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமி ஒருவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை பெண்கள் இருவர் அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். ☞11

## கையூட்டுக் கொடுக்க முயன்றவர் கைது!

கிளிநொச்சி, மார்ச் 31
பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இலஞ்சம் கொடுக்க முயன்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி, தருமபுரத்தில் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வெளிநாட்டில் இருந்த வந்திருந்த ஒருவர், ☞11

யாழ். பல்கலை விஞ்ஞானபீட

## புதுமுக மாணவனுக்கு கொடூரப் பகிடிவதை!

பல்கலை மானியங்கள் ஆணைக்குழுவில் பாதுகாப்புக் கோரித் தந்தை முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 31
பகிடிவதை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞானபீட புதுமுக மாணவனான தனது மகனுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கோரியும், பகிடிவதைக்கெதிராக நீதியானதும், சுதந்திரமானதுமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் தந்தை ஒருவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.
நாத்தாண்டியாவைச் சேர்ந்த மாணவன் ஒருவரின் தந்தையே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.
கடந்த 27ஆம் திகதி வியாழக்கிழமை பல்கலைக்கழக விடுதியில் இருந்து பல்கலைக்கழகத் ☞11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 30.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4033 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 27 28 41 70 |
| விசேட எழுத்து | T |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 30.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1100 |
| வெற்றி இலக்கினம் | தனுஷ் |
| வெற்றி இலக்கங்கள் | 10 23 34 50 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 30.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 059 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 7 6 1 8 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 30.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2139 |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 13 55 57 65 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 30.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5791 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 3 4 3 6 3 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 30.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1821 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 20 33 72 81 |
| விசேட எழுத்து | O |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 30.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0366 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 3 6 3 4 |




# போர்க்குற்றவாளிகள் சகலரையும் சர்வதேசம் தண்டிக்கவேண்டும்

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை

**வவுனியா, மார்ச் 31**

**போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவத்தளபதிகளுக்குப் பிரித்தானியா தடைவிதித்துள்ளதை நாம் வரவேற்கின்றோம். அத்துடன் போர்க் குற்றத்தில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் இவ்வாறான தடைகள் பிரயோகிக்கப்படவேண்டும் என்று வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசானது நீண்டகாலமாகப் பொறுப்புக்கூறலில் இருந்து தவறிவருகின்றது. இதனால் நாம் சர்வதேச நீதிகோரி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்துவருகிறோம்.

இன்று போர்க்குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டதாக சில இராணுவத்தளபதிகளுக்குப் பிரித்தானியா பயணத்தடைவிதித்துள்ளதன் மூலம் இனப்படுகொலை இங்கு நடந்துள்ளதை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதை உணரமுடியும். இவ்வாறு தடைவிதிக்கப்படவேண்டிய பட்டியலில் இன்னும் பல இராணுவத்தினரும் முன்னாள் ஜனாதிபதிகளும் உள்ளனர். அவர்கள் மீதும் இவ்வாறான தடைகளை விதிக்க வேண்டும். அனைத்துலக நாடுகளும் இந்தத் தடைகளை விதித்துக் குற்றம் செய்தவர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி சர்வதேசப் பொறிமுறையூடாக எமக்கான நீதியைப் பெற்றுத் தரவேண்டும் - என்றனர். (ச-110)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 30.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0499 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| W | 8 7 1 2 7 3 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 30.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2765 | G | 02 41 47 49 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 30.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| M | 05 18 32 71 | 4926 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 30.03.2025 | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0654 | 16 22 27 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 30.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 02 07 30 43 | 4477 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 30.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 28 | 01 32 40 42 | 1941 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 30.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| W | 02 18 42 68 | 2591 |

# சர்வதேச நாடுகளிடம் நாடு அடகுவைக்கப்படாது

## அநுர ஆணித்தரம்

கொழும்பு, மார்ச் 31

நாடு மற்றும் நாட்டு மக்களை அடகுவைக்காது- காட்டிக்கொடுக்காது- மிகவும் நேர்த்தியான முறையில் சர்வதேச உறவு பேணப்பட்டுவருகின்றது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பரப்புரையை நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் சர்வதேசத் தொடர்பு இல்லாமல்போகும் எனப் பரப்புரை முன்னெடுக்கப்பட்டது.

தேர்தல் முடிந்த பிறகு இந்தியா, சீனாவிடமிருந்து அழைப்பு வந்தன. தற்போது ஜப்பான் மற்றும் வியட்நாம் அழைத்துள்ளன.

வலுவான சர்வதேசத் தொடர்பை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

நாட்டையும், நாட்டுமக்களையும் காட்டிக்கொடுக்காமல், நேரடியாகக் கொடுக்கல், வாங்கல் செய்யும் வகையில் சர்வதேச உறவு உள்ளது.

வெளிநாட்டு முதலீடு வராது என்றார்கள். ஆனால் முதலீட்டாளர்கள் வந்தவண்ணமுள்ளனர்- என்றார். (ச-44)



# இருநாட்டு மீனவர்கள் பிரச்சினை; அமைச்சுமட்டப் பேச்சு விரைவில்

கொழும்பு, மார்ச் 31

இலங்கை, இந்திய மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய அமைச்சு மற்றும் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் வெகுவிரைவில் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கு இரு தரப்பிலும் இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது என்று கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள தமிழக மீனவ பிரதிநிதிகளுடான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமைச்சு மற்றும் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடலை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் தமிழக மீனவர்களின் ஆதரவு நிலைப்பாடு தெரிவிக்கப்படவுள்ளது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்பதை இந்திய மீனவர்கள் உணர்ந்தனர் என்பதை அறியமுடிந்தது.

எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கும், இது தொடர்பில் அடுத்தக்கட்டப் பேச்சுகள் முன்னெடுப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது என்றார். (ச-44,26)

# பாங்கொக் செல்கிறார் பிரதமர்

கொழும்பு, மார்ச் 31

தாய்லாந்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்பதற்காகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, பாங்கொக் செல்லவுள்ளார். அவருடன் பிரதி வெளிவிவகார அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவாவும் பயணிக்கவுள்ளார்.

அதேவேளை மியான்மர் மற்றும் தாய்லாந்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தையடுத்து குறித்த மாநாடு பிற்போடப்படுமா என்ற கேள்வி எழுந்த நிலையில் மாநாட்டுத் திகதியை மாற்றுவது தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-33-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதாரம் தொடர்ந்தும் பாதிப்புக்குள்

*சீர்திருத்தங்கள் மிக அவசியம்; நாணயநிதியம் சுட்டிக்காட்டு*

**கொழும்பு, மார்ச் 31**

**இலங்கையில் பொருளாதார மீளெழுச்சி வேகமடைந்துவருகின்ற போதிலும், பொருளாதார நிலைமைகள் பாதிக்கப்படக் கூடியனவாகவே காணப்படுகின்றன என்று சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணயநிதியத்தின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. நாணயநிதியத்தின் ஊடகப் பேச்சாளர் ஜூலி கோசாக் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுக் குழுவானது இலங்கைக்கான மூன்றாவது மதிப்பாய்வை அங்கீகரித்துள்ளது. இதையடுத்து, இலங்கைக்கு 334 மில்லியன் டொலர் வழங்கப்பட்டுள்ளது. இந்த உதவிகளால் இலங்கையின் பொருளாதாரம் வேகமடைந்து வருகின்றது. அத்துடன், இலங்கையில் பணவீக்கமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக நேர்மறையான நிலைமைகள் காணப்பட்டாலும் நாட்டின் பொருளாதாரம் இன்னும் பாதிக்கப்படக்கூடியதாகவே உள்ளது. எனவே பொருளாதார நிலைத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மை நீடித்துநிலைத்திருப்பதை உறுதிசெய்ய சீர்திருத்தச் செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியமாகவுள்ளது - என்றார். (ம)

# தலைமன்னாரில் 85 கிலோ கஞ்சா மீட்பு

மன்னார், மார்ச் 31

தலைமன்னார் ஊர்மலைப் பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த கேரளக் கஞ்சா நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னார் இராணுவப்புலனாய்வுப் பிரிவுக்குப் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து நடத்தப்பட்ட சோதனையின் போது 18 மில்லியன் மதிப்புள்ள 85 கிலோ 200 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் போதைப்பொருள் இந்தியாவிலிருந்து கடல்வழியாகக்கொண்டு வரப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது. (ச-213)




## சா/தரப் பரீட்சை மதிப்பீடு ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 31

2024 ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிகள் நாளை முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. விடைத்தாள்களின் மதிப்பீடு 1,066 மதிப்பீட்டு மையங்களில் நடைபெறவுள்ளது. முதற்கட்ட விடைத்தாள் மதிப்பீடு நாளை முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்காக சுமார் 16,000 ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள் எனவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# 9 கிலோ போதைப்பாக்குடன் யாழ்ப்பாணத்தில் இருவர் கைது



யாழ்ப்பாணம் நகரில் 9 கிலோ 300 கிராம், கஞ்சா கலந்த மாவாப் பாக்குடன் இருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் உதவிப் பொலிஸ் பரிசோதகர் நந்தகுமார் குழுவினரால் இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-20-26)


## காசநோயாளர் நாட்டில் உயர்வு

கொழும்பு, மார்ச் 31

கடந்த வருடம் நாட்டில் காசநோயாளர்களின் எண்ணிக்கை 9,200 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதில் 250 குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நோய் அறிகுறிகள் காணப்படும் நோயாளர்கள் உடனடியாக மருத்துவ உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)



# 100 மில்லியன் தேங்காய்களுக்கு அடுத்தாண்டில் பற்றாக்குறை

கொழும்பு, மார்ச் 31

நாட்டில் அடுத்த ஆண்டு தேங்காய்ப் பற்றாக்குறை தீவிரமடையும் என்றும் சுமார் 100 மில்லியன் தேங்காய்கள் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆண்டுதோறும் சுமார் 3ஆயிரம் மில்லியன் தேங்காய்கள் தேவைப்படுகின்றன.

மேலும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, 200 மில்லியன் தேங்காய்களுக்கு சமமான தேங்காய்ப் பால், தேங்காய்ப் பவுடர் மற்றும் குளிர்ந்த தேங்காய் கூழ் ஆகியவற்றை இறக்குமதிசெய்ய அனுமதிக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நாட்டின் தேங்காய் உற்பத்தி 32.3 சதவீதம் கணிசமாகக் குறைந்து 167.8 மில்லியன் தேங்காய்களாகக் குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிவரத் துறை குறிப்பிட்டுள்ளது என்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)




**இலங்கையில இப்ப தேர்தல் காலமெண்டதால அடிக்கடி அதிசயங்கள் நடக்கத்தொடங்கிட்டுது. ஒரு குடும்பப்பெண் அவாவுக்கே தெரியாமல் எலக்சனில வேட்பாளரா நிக்கிற அதிசயமொண்டு யாழ்ப்பாணத்தில நடந்திருக்குது.**

**கரவெட்டிப் பிரதேசசபையில திசைகாட்டியில எலக்சன் கேக்கிற ஒருத்தர், தனக்குத் தெரிஞ்ச ஒரு வீட்டை போயிருக்கிறார். அங்க குடும்பத்தலைவியைக் கூப்பிட்டு, 'அக்கா, நான் இந்த வட்டாரத்தில இந்த முறை எலக்சன் கேக்கப்போறன். அதுக்கு உதவி செய்வியள்தானே?' எண்டு கேட்டிருக்கிறார்.**

**'நீங்கள் கேட்டால் கட்டாயம் உதவி செய்யிறம்' எண்டு அவாவும் சொல்லி அனுப்பி இருக்கிறா. கொஞ்சநாளால அந்த வேட்பாளர், இந்த அக்காவுக்கு போன் அடிச்சிருக்கிறார். 'அக்கா, ஒருக்கா உங்கட ஐசி போட்டோக் கொப்பியை அனுப்பேலுமோ?' எண்டு கேட்டிருக்கிறார். அவாவும் ஏதோ உதவிப்பொருள் தாறதுக்கு பதியினமாக்கும் எண்டு நினைச்சு, என்ன ஏதெண்டு கேக்காமல் அனுப்பிட்டா. பிறகொருநாள் தங்கட ஓப்பிஸுக்கு வந்து போர்ம் ஒண்டில சைன் வைச்சிட்டுப் போகச்சொல்லி அந்த வேட்பாளர் கேட்டிருக்கிறார். இவாவும் 'அண்டைக்கு உதவிப் பொருளுக்குப் பதிஞ்சவைதானே அதுக்குத்தான் ஏதோ சைன் கேக்கினம் போல' எண்டு நினைச்சுக் கொண்டு, அங்கபோய் அவை காட்டின இடத்தில சைன் பண்ணிட்டு, எப்ப உதவிப்பொருள் வருமெண்டு பார்த்துக்கொண்டு இருந்திருக்கிறா.**

**ரண்டுமூண்டு நாளைக்குமுதல் பேஸ்புக்கை பார்த்திட்டு அவாவுக்கு தலைசுத்தத் தொடங்கிட்டுது. என்னெண்டு பார்த்தால், திசைகாட்டியில அந்த வட்டாரத்தில அவாவும் எலக்சன் கேக்கிறா எண்டு அந்த வேட்பாளர் பேஸ்புக்கில போட்டு வாக்குக் கேட்டிருக்கிறார். நிவாரணம் வருமெண்டு பார்த்துக் கொண்டிருக்க இப்பிடியொரு நெஞ்சிடி வந்திட்டுதே எண்டு அவா அந்த வேட்பாளருக்கு போன் எடுத்து - நான் எப்ப எலக்சன் கேக்க ஓமெண்டன்? உங்களுக்கு உதவி தானே செய்யிறன் எண்டன். எனக்கு என்ன ஏதெண்டு சொல்லாமல் சைன் எல்லாம் வாங்கி, இப்பிடி என்னையும் வேட்பாளர் எண்டு போட்டது நியாயமோ? இதால என்ர குடும்பத்துக்கையெல்லோ வீண்சண்டை வரப் போகுது? என்னை வேட்பாளராப் போட்ட விசயம் எனக்கே தெரியாதெண்டால் அவை நம்புவினமோ? முதல்ல பேஸ்புக்கில நான் எலக்சன் கேக்கிறன் எண்டு போட்ட போஸ்ட்டை அழிச்சு விடுங்கோ எண்டு கோபமாச் சொல்லியிருக்கிறா. உடனேயே அந்த வேட்பாளரும் இவான்ர படம்போட்ட அந்த போஸ்ட்டை அழிச்சிட்டார். இப்ப அவா விசயம் தெரிஞ்ச கொஞ்சப்பேரிட்ட இதைப்பற்றிச் சொல்ல, அவையும் 'உடன தேர்தல் ஆணைக்குழுவில முறைப்பாடு செய்யுங்கோ' எண்டு அட்வைஸ் பண்ணியிருக்கினமாம். அநேகமா நாளைக்கு அவா முறைப்பாடும் செய்யிறதுக்கு சான்ஸ் இருக்கு. வழக்கமா உந்த அரசியல்வாதியள் தேர்தலில வாக்காளர்களைத்தான் ஏமாத்திறவை. இப்ப என்னெண்டால் வேட்பாளர்களையே ஏமாத்தி, அவைக்கே தெரியாமல் எலக்சனில நிக்கவைக்கிற வேலையெல்லாம் செய்யத் தொடங்கிட்டினம் போல. ஊருக்கும் உலகத்துக்கும் ஊழலை ஒழிப்பம் எண்டு சொல்லுறவைக்கு, இப்பிடிப் பேய்க்காட்டி எலக்சனிலை ஆக்களை நிக்கவைக்கிறதும் ஊழல் எண்டு தெரியாமல் போனது அதிசயம்தான் பாருங்கோ.**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்களில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பொருள் வரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் உற்சாகமாக செயல்படுவீர்கள்.

**மிதுனம்:** துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். சகோதரவகையில் சுபச் செலவு கள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை யால் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் பணிச் சுமை குறைவதால், உற்சாகமாக இருப்பீர்கள்.

**கடகம்:** உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**சிம்மம்:** இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்த னைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பு சுமாராகத்தான் இருக்கும்

**கன்னி:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்க ளின் ஆலோசனை அவசியம். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டுக்குச் சென்று வருவீர்கள். பிரார்த்தனையை நிறை வேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**துலாம்:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்பு தருவார். பிள்ளைகளின் விருப் பத்தை நிறைவேற்றுவீர்கள். உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**விருச்சிகம்** : காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனை விக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வார்கள்.

**தனுசு**காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி யுடன் செலவும் உண்டாகும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத் துடன் கோயில்களுக்குச் சென்றுபிரார்த்தனையைநிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப் பயணங் களைத் தவிர்ப்பது நல்லது. உறவினர் கள் வருகையால் சிற்சில சங்கடங் களைச் சமாளிக்கவேண்டி வரும்.



# ராஜஸ்தான் அதிரடியில் சுருண்டது சென்னை

**ஐ.பி.எல். தொடரின் நேற்று நடைபெற்ற 11 ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் 6 ஓட்டங்களால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது.**

கவுகாத்தியில் நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களை எடுத்தது. ராஜஸ்தான் அணி சார்பாக நிதிஷ் ராணா 81 ஓட்டங்களையும், ரியான் பரக் 37 ஓட்டங்களையும், சஞ்சு சாம்சன் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக கலீல் அகமது, நூர் அகமது, மதீஸ் பத்திரன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

183 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக ருதுராஜ் கெய்க்வாட் 63 ஓட்டங்களையும், ரவீந்திர ஜடேஜா 32 ஓட்டங்களையும், ராகுல் திருபதி 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சார்பாக வனிந்து ஹசரங்க 4 விக்கெட்டுக்களையும், ஆர்ச்சர் மற்றும் சந்தீப் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (எ-இ)

# சன்ரைசர்ஸை இலகுவாக சாய்த்தது டெல்லி கபிடல்ஸ்



ஐ.பி.எல். தொடரின் நேற்று நடைபெற்ற 10 ஆவது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை 7 விக்கெட்டுகளால் வீழ்த்தியது டெல்லி கபிடல்ஸ் அணி. இது டெல்லி அணிக்கு இந்த சீசனில் இரண்டாவது வெற்றியாகும்.

விசாகப்பட்டினத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஒரு கட்டத்தில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 58 ஓட்டங்கள் என்று தடுமாறியது ஹைதராபாத். ஆனால் அதன்பின்னர் கிளாஸன் மற்றும் அனிகேத் வர்மா இணைந்து 77 ஓட்டங்கள் கூட்டணி அமைத்தனர். கிளாஸன் 32 ஓட்டங்களும், அனிகேத் வர்மா 74 ஓட்டங்களும் எடுக்க, 18.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 163 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது சன்ரைசர்ஸ். டெல்லி அணி சார்பாக 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார் ஸ்டார்க். குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

164 ஓட்டங்கள் என்ற இலக்கை டெல்லி கபிடல்ஸ் அணி விரட்டியது. டூ பிளெஸ்ஸிஸ், ஜேக் பிரேசர் மெக்கர்க் இணைந்து 81 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். டூ பிளெஸ்ஸிஸ், 27 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்தார். ஜேக் பிரேசர் மெக்கர்க், 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அபிஷேக் போரெல் 34, ஸ்டப்ஸ் 21, கே.எல்.ராகுல் 15 ஓட்டங்கள் எனப் பங்களிக்க, 16 பரிமாற்றங்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 166 ஓட்டங்கள் எடுத்து டெல்லி வெற்றி பெற்றது.

ஸ்டார்க் ஆட்ட நாயகன் விருதை வென்றார். நடப்பு சீசனில் இரண்டு ஆட்டங்களில் விளையாடி இரண்டிலும் வெற்றி பெற்றுள்ளது டெல்லி கபிடல்ஸ். (எ-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

அறிவுத் தேவையைவிட கவனக்குறைவுதான் அதிக கஷ்டத்தை உண்டாக்கிவிடுகிறது.

– சர்ச்சில் –

## மதவாதம் எப்போதும் ஆபத்தே!

இலங்கைக்குள் அதிலும் யாழ்ப்பாணத்துக்குள், இந்தியாவில் செயற்படும் இந்துமத அடிப்படைவாத அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.ஸின் செல்வாக்கு அதிகரித்துவருகின்றது என்று எச்சரித்துள்ளார் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியரான வீ.அரசு. பா.ஜ.க.வால் போசிக்கப்பட்டு வளர்க்கப்படும் ஆர்.எஸ்.எஸ்.ஸை இந்தியாவில் இருந்து தோற்கடிக்கவேண்டும் என்று அங்குள்ள ஜனநாயக அமைப்புகள் செயற்படும்நிலையில், அந்த அமைப்பு இலங்கை உள்ளிட்ட அயல்நாடுகளில்கிளைபரப்புகின்றது என்றும் பேராசிரியர் அரசு கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்.


மதம் என்பது மனிதனின் ஆன்மீகத் தேடலுக்கான வழிகாட்டியாக இருக்கவேண்டும். ஆனால், அதே மதம் பலாத்காரம், பகைமை மற்றும் பிரிவினைகளுக்குக் காரணமாக மாறும்போது, அது ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறிவிடுகிறது. மத அடிப்படைவாதம் என்பது ஒரு வகையான மன நோய். இது மதத்தின் பெயரால் வன்முறையை நியாயப்படுத்துகிறது, பிறமதங்களைத் தாழ்த்துகிறது, மற்றும் சமூக ஒற்றுமையைச் சீர்குலைக்கிறது. இந்தியாவின் மிகப்பழமையான மற்றும் செல்வாக்குமிக்க இயக்கங்களில் ஒன்றான ராஷ்டிரிய சுயம்சேவாக் சங்கம் (ஆர்.எஸ்.எஸ்.) பற்றிய விவாதங்கள் எப்போதும் சர்ச்சைக்கு உரியனவாகவே இருந்துள்ளன. எனவே, பேராசிரியர் அரசுவின் எச்சரிக்கையை சாதாரண விடயமாக எடுத்துவிட்டுக் கடந்துபோகமுடியாது.

இலங்கையில் இடம்பெற்ற முப்பது ஆண்டு காலப்போரும், அதனால் ஏற்பட்ட குருதிச் சகதியும், பெரும் துன்பங்களும் அடிப்படைவாதத்தின் விளைவுகளே. 'முள்ளை முள்ளால் தான் எடுக்கலாம்' என்பர். அது எல்லாவற்றுக்கும் பொருந்தும் என்றில்லை. ஓர் அடிப்படைவாதத்துக்குப் போட்டியாக, இன்னொரு அடிப்படைவாதக் கருத்தியலை விதைத்தால் இந்தத்தீவு தாங்காது. ஆதலால், இந்தியாவில், இஸ்லாமியர்களின் குடியுரிமை முதல், வழிபாட்டுரிமைகள், தொழிலுரிமைகள் எனப் பலவற்றைச் சவாலுக்குட்படுத்தும் ஆர்.எஸ்.எஸ். இலங்கைக்குள் கால்பதிக்க கிஞ்சித்தும் இடம் வழங்கக்கூடாது. அதில் கண்ணும் கருத்துமாக அரசியற் தலைவர்களும், மக்கள் தலைவர்களும் செயற்படவேண்டும்.

இலங்கைக்கு இன்று மதச்சகிப்புத்தன்மையே தேவைப்படுகின்றது. அனைத்து மதங்களையும் அரவணைக்கும் 'கனேடியக் கலாசாரத்தை' கட்டமைக்கவேண்டியதே காலத் தேவையாக இருக்கின்ற வேளையில், அதற்கு நேரெதிரான சிந்தனைகளும், செயற்பாடுகளும், கருத்தியல் விதைப்புகளும் நிலைமையை மேலும் மோசமாக்கும். அடிப்படைவாதம் என்பதே மனிதகுல விரோதிதான். அது இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம், கத்தோலிக்கம், பௌத்தம் என எந்த மதங்களைச் சார்ந்திருந்தாலும், வெட்டி வீழ்த்தி வேரறுக்கப்படுவது அவசியம்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111

செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


## விசேட மருத்துவர்கள் கிராமங்களிலும் சேவை



அடுத்தமாதம் முதல் திட்டம் நடைமுறை

**கொழும்பு, மார்ச் 31**

**கிராமிய மருத்துவமனைகளிலும் விசேட மருத்துவர்களின் சேவையை விரிவுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரதியமைச்சர் மருத்துவர் ஹங்சக விஜயமுனி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது ஆதார மருத்துவமனைகள் அல்லது அவற்றுக்கு அடுத்த தரத்திலான மருத்துவமனைகளில் மாத்திரமே விசேட மருத்துவர்களின் சேவை காணப்படுகின்றது. இதன் காரணமாக கிராமப்புற மக்களுக்கு விசேட மருத்துவர்களின் சேவையை இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கு இயலாமல் போகின்றது.

அந்தவகையில் கிராமிய மருத்துவமனைகளில் வாரத்துக்கு ஒரு நாள் விசேட மருத்துவர்களின் சேவையைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்த நடவடிக்கை அடுத்த மாதம் முதல் முன்னெடுக்கப்படும். கிராமிய மருத்துவமனைகளில் இருந்து நகர மருத்துவமனைகளுக்கு வருகைதரும் நோயாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்- என்றார். (ச)

## பிறபயிர்களுக்கும் உரமானியம்!

கொழும்பு, மார்ச் 31

இந்த வருட சிறுபோகத்தில் நெல் விவசாயத்துக்கு மட்டுமன்றி நெல்வயல்களில் பயிரிடப்படும் பிறபயிர்களுக்கும் உரமானியங்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்காக தேசிய மக்கள் சக்தி பெலியத்தயில் நடத்திய மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மூன்று வாரங்களுக்கு முன்பு அமைச்சரவையில் ஒரு முடிவை எடுத்தோம், இதுவரை நெல் விவசாயத்துக்கு மட்டுமே உரமானியங்கள் வழங்கப்பட்டுவந்தன. ஆனால் நெல்வயல்களில் பயிரிடப்படும் கூடுதல் பயிர்களுக்கும் இனி உரமானியங்களை வழங்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## டிரான் அலஸுக்கு சி.ஐ.டி. அழைப்பு

கொழும்பு, மார்ச் 31

முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்,குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு இன்று திங்கட்கிழமை அழைக்கப்பட்டுள்ளார்.

மாத்தறை வெலிகமவில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு அருகில் 2023 ஆம் ஆண்டு நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த ஒரு பொலிஸ்சார்ஜென்ட் இறந்தமை தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காக அவர் அழைக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. (ச-இ)

## புதிய நீர் இணைப்பு ஒன்லைனில் பதிவு

புதிய நீர் இணைப்புகளுக்கான ஒன்லைன் விண்ணப்பச் செயன்முறையை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை அறிமுகப்படுத்தியுள்ளது. விண்ணப்பங்களை WATERBOARD.LK எனும் வலைத்தளம் மூலம் சமர்ப்பிக்கலாம். அத்துடன், கோரிக்கை விடுக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் இணைப்புகள் வழங்கப்படும்.

இந்த முயற்சிக்கான ஒரு முன்னோடித்திட்டம் தற்போது நடைபெற்றுவருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கரன்னாகொட வழக்கில் நீதிபதிகள் விலகல்!

கொழும்பு, மார்ச் 31

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னாகொட தொடர்பான மேல்முறையீட்டை விசாரிப்பதில் இருந்து இரண்டு உச்சநீதிமன்ற நீதிபதிகள் விலகியுள்ளனர். இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் எடுக்கப்பட்டபோதே, நீதிபதி ஏ.எச்.எம்.டி நவாஸ் மற்றும் நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் இந்த வழக்கைவிசாரிப்பதில் இருந்துவிலகுவதாக அறிவித்துள்ளனர். (ச-இ)

நாளை

செவ்வாய்க்கிழமை-பங்குனி- 18

01.03.2025

சுபநேரம் : 10.41- 12.11

ராகுகாலம் : 03.11 - 04.41


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்
# 2025 – 2027

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2025 ஆம் ஆண்டில் சனிப் பெயர்ச்சியானது நேற்றுமுன்தி னம் 29 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. மீனராசிக்கு வரும் சனிபகவான் தொடர்ந்து 03.06.2027 வரை இரண்டரை வருடகாலத்துக்கு இந்த ராசியில் சஞ்சாரம்செய்து அருளாசி வழங்குவார்.



**எதிலும் மனச்சாட்சிக்கு விரோதமான காரியத்தை செய்யாத மீன ராசிக்காரர்களே,**



## மீனம்

நீங்கள் குடும்பப் பெருமையைக் காப்பவர்கள். பெரியவர்களை மதிப்பவர்கள். சமுதாய மாற்றத்திற்கு பாடுபடுபவர்கள். இனிய வார்த்தைகள் இரும்புக் கதவையும் திறந்துவிடும் என்று உணர்ந்த நீங்கள் அன்பும் அணுகுமுறையும் கொண்டவர்கள். இதுவரை உங்களது அயன சயன போக ஸ்தானத்தில் இருக்கும் சனிபகவான் விலகி இந்த ராசிக்கு வருகிறார். மூன்றாம் பார்வையால் தைரிய வீரிய ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் களத்திர ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் தொழில் ஸ்தானத்தையும் பார்க்கிறார். உங்கள் சகோதர, சகோதரிகளிடம் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை வளரும். அவர்களுடன் சேர்ந்து இனிய பயணங்களைச் செய்வீர்கள். உங்களின் ஆற்றல் அதிகரிக்கும். பகைவர்களை வெற்றிகொள்வீர்கள். உடல் நலம் சீராகும். வருமானம் சிறப்பாக இருக்கும். உங்களின் பெருந்தன்மையை அனைவரும் பாராட்டுவார்கள். அதே நேரம் ஆடம்பரக் கேளிக்கைகளுக்காக செலவு செய்வதைக் குறைத்துக்கொள்ளவும். சில நேரங்களில் யோசிக்காமல் பேசி வம்பில் மாட்டிக்கொள்ளநேரலாம். மறைமுக எதிரிகளிடம் கவனமாக இருக்கவும். உங்கள் ரகசியங்களை எவரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டாம். மற்றபடி உங்களின் பதவியால் சில ஆதாயங்கள் கிடைத்து, மகிழ்ச்சி உண்டாகும். இதன்மூலம் பொதுநலக் காரியங்களுக்குச் செலவு செய்வீர்கள். திட்டமிட்ட வேலைகளைத் தள்ளிவைக்க வேண்டிய சூழ்நிலை, சில நேரங்களில் உருவாகலாம். எனவே உங்கள் காரியங்களில் கவனமாக இருக்கவும். மற்றபடி நேர்மையான எண்ணங்களால் உங்களின் வாழ்க்கைத்தரம் உயரும். அலுவலகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்று நடத்த நல்வாய்ப்பு உருவாகும். இதனால் மனதில் இருந்த காரணமில்லாத வருத்தங்களும், குழப்பங்களும் மறையும்.

சமூகத்தில் உங்களின் மதிப்பு, மரியாதை உயரும். வழக்கு விவகாரங்களில் சாதகமான தீர்ப்பு கிடைக்கும். உங்களின் எண்ணங்களும், செயல்களும் உங்களுக்கு வாழ்வில் உயர்ந்த இடத்தைப் பெற்றுத்தரும். எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் பெறுவீர்கள்.

**வியாபாரிகள்:** கூடுதல் எச்சரிக்கையுடன் வாணிபத்தில் ஈடுபடவும். எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்துச் செயற்படுவது அவசியம். மற்றவர்களிடம் பண விடயங்களில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும். கடினமான வேலைகளையும் சிறப்பாகச் செய்துமுடிப்பீர்கள்.

**கலைத்துறையினருக்கு:** புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். உங்களின் முயற்சிகள் அனைத்தும் வெற்றிப்பாதையில் செல்லும். புதிய நட்புகளால் நல்ல வாய்ப்புகளைப் பெறுவீர்கள். சக கலைஞர்களும், ரசிகர்களும் உங்களுக்கு நிறைவான ஆதரவு தருவார்கள். உங்களின் முழுத் திறமையையும் வெளிக்கொணர்வீர்கள். வருமானமும் சீராகவே இருக்கும்.

## மதிப்பு, மரியாதை உயரும்

**பெண்களுக்கு:** மன நிம்மதியைக் காண்பீர்கள். தர்ம காரியங்களிலும், தெய்வ வழிபாட்டிலும் ஈடுபடுவீர்கள். உடல் வலிமைபெறத் தக்க பயிற்சிகளில் ஈடுபடவும். வருங்காலத் திட்டங்களுக்காக அடித்தளம் போடுங்கள்.

**பூரட்டாதி:** எந்த நிலையிலும் அடுத்தவர் பற்றிய ரகசியங்களை வெளியே சொல்லாமல் மனதில் வைத்துக்கொள்வீர்கள். பணவரத்து அதிகரிக்கும். செயற்றிறன் மேலோங்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**உத்திரட்டாதி:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும். பயணங்களால் இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்துக்குத் தேவையான பொருள்கள் வாங்குவீர்கள்.

**ரேவதி:** பணவரத்து அதிகரிக்கும். எந்த ஒரு காரியமும் இலாபகரமாய் நடந்து முடியும். செயற்றிறன் கூடும். மாணவர்கள் பாடங்களை மனநிறைவுடன் படிப்பீர்கள். கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடையும். வீண்வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

## சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 31

சிறுப்பிட்டி வடக்கு மாதியந்தனை இலுப்பையடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டுச் சிறப்புச்சொற்பொழிவு ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் 2ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 12ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் சைவப்புலவர்கள் ஏ. அனுசாந்தன், செ. கந்த. சத்தியதாசன், பொன். சந்திரவேல், செ. த. குமரன், க. கைலநாதன் மற்றும் இளஞ்சைவப்புலவர்கள் ச. நவநீதன், நித்திய பாபுதரன், க. கயிலைவாசன், த. வனோஜ்குமார் ஆகியோர்களின் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. (ச-41)

## குழந்தை ம.சண்முகலிங்கம் நினைவாக நாடக விழா

யாழ்ப்பாணம், மார்ச் 31

உலக நாடகதினத்தை முன்னிட்டு, நாடக ஆளுமை குழந்தை ம. சண்முகலிங்கம் நினைவாக, சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையம் நடத்தும் 'நாடக விழா' சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நினைவுரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் க. ரதிதரன் நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து, யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு அரங்க ஆளுமைகளின் நாடகங்கள், சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலைய மாணவர்களின் நாடகம் உள்ளடங்கலாக 7 நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன. (ச-41-125)

## மரியசேவியர் அடிகளாரின் நினைவுநாளும் பேருரையும்

யாழ்ப்பாணம், மார்ச் 31



திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகர் அமரர் அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளாரின் நான்காவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இல.286, பிரதான வீதி ,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் திருமறைக் கலாமன்றத்தால் நினைவுப் பேருரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், நினைவுப் பேருரையை 'அழகியல் ; ஓர் ஆன்மீக நோக்கு நிலை' எனும் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியரும் நுண்கலைத்துறை முன்னாள் தலைவருமான கலாநிதி. திருமதி ஏ.என். கிருஷ்ணவேணி ஆற்றவுள்ளார். (ச)

## கர்ப்பிணி சிகிச்சை நிலையங்களை புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 31

பன்னாகம் மற்றும் பொன்னாலைப் பகுதிகளிலுள்ள ஆரம்ப கர்ப்பவதி சிகிச்சை நிலையங்களைப் புனரமைப்புச் செய்யவேண்டும் என சங்கானைப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

பன்னாகம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிகிச்சை நிலையத்தின் உள்கட்டமைப்பு வேலைகள் புனரமைப்புச் செய்யப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ச-41-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகாயத் தாமரைகள் அழகு, ஆனால் ஆபத்து!



யாழ்ப்பாணம், மார்ச் 31
நுணாவில் மேற்கு கொல்லங்கிராய்குளம் மற்றும் அதனை அண்டிய வயல்நிலங்களை ஆக்கிரமித்து வளர்ந்து பூத்துக் குலுங்கும் ஆகாத்தாமரை செடிகளின் அழகு மனதைக் கொள்ளைகொள்ளும் அதே வேளை விவசாயச் செய்கைக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கின்றது என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.
இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
இந்தப் பகுதிகளில் ஆகாயத்தாமரைச் செடிகள் குளங்களின் நீர்ப்பரப்புக்கு மேலாக மிதந்து வளர்கின்றன. சில இடங்களில் நீர்நிலைகள் இருப்பதே தெரியாத அளவில் இதன் ஆக்கிரமிப்பு காணப்படுகிறது.
இந்தத் தாவரம் அதிகளவில் நீரைஉறிஞ்சும்தன்மைகொண்டதாக உள்ளது. ஏற்கனவே கடும் வெயில் காரணமாக நீர் நிலைகளில் உள்ள நீரின் அளவு குறைந்துவருகிறது. இதனால் விவசாயநிலங்கள் வறண்டு போவதுடன் நீர்வாழ் உயிரினங்களும் உயிரிழக்கின்றன.
அத்துடன் இந்த அழகான பூக்களை புகைப்படம் எடுக்க வருபவர்களும் கால்நடைகளும், படர்ந்துவளர்ந்துள்ள இந்தத் தாவரத்தால் குளத்தை இனம் காணமுடியாமல் நீரினுள் சிக்கிக்கொள்ளும் ஆபத்தும் ஏற்படுகின்றது. எனவே உரிய அதிகாரிகள் நீர்நிலைகளில் பரவிக் கிடக்கும் இந்தத் தாவரத்தை அகற்றி நீர்நிலைகளைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ச-28)

# தந்தை செல்வாவின் 127ஆவது ஜெயந்தி தினம்





கிளிநொச்சி, மார்ச் 31
வடமாகாண ஆளுநரும், செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் அறங்காவலருமான நாகலிங்கம் வேதநாயகம் தலைமையில் தந்தை செல்வாவின் 127ஆவது ஜெயந்தி தின நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது.
நிகழ்வில் முன்னாள் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ. நடராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி , பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட அரசறிவியல் விரிவுரையாளர் கலாநிதி இராமசாமி ரமேஸ், சட்டத்தரணி ஜனாப் முஜிபுர் ரஹ்மான் , சட்டத்தரணி புராதனி சிவலிங்கம் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-113)

# கனடாப் பொதுத்தேர்தலில் தமிழர்கள் நால்வர் களம்

றொறண்டோ, மார்ச் 31
கனடாப் பொதுத்தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 28ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் நான்கு தமிழ்பேசும் வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளனர்.
அவர்களில் இருவர் லிபரல் கட்சி சார்பிலும் ஏனைய இருவர் கொன்சவேர்ட்டிவ் கட்சி சார்பிலும் போட்டியிடுகின்றனர். கடந்த லிபரல் அரசாங்கத்தில் அமைச்சராகப் பணியாற்றிய ஹரி ஆனந்தசங்கரி, ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியிலும், புதிய முகமாக தற்போதைய மார்க்கம் நகரசபையின் 7ஆம் வட்டார உறுப்பினர் ஜுவொனிற்றா நாதன் மார்க்கம் பிக்கரிங் புரூக்ளின் தேர்தல் தொகுதியிலும் களமிறங்கவுள்ளனர்.
கொன்சர்வேர்ட்டிவ் கட்சி சார்பில் போட்டியிடும் லையனல் லோகநாதன் மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியிலும் மற்றும் முன்னாள் பொலிஸ் அதிகாரியான நிரான் ஜெயநேசன் மார்க்கம்யுனியன்வில் தொகுதியிலும் களமிறங்கவுள்ளனர். (ச-இ)



# ஓட்டிசம் நிவர்த்தி செய்யக்கூடிய நரம்பியல் சிக்கல்நிலை!

ஓட்டிசம் என்பதற்குப் பல்வேறுபட்ட அர்த்தப்பாடுகள் இன்று முன்வைக்கப்பட்டு வருகின்றன. உண்மையில், ஓட்டிசம் என்பது ஒரு நோயல்ல. இது நரம்பியல் சார்ந்த ஒரு சிக்கல் தன்மையாகும்.

**ஓட்டிசத்தின் அறிகுறிகள்**

- ஒரு குழந்தை ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை, பல்வேறு விடயங்களைக் கருத்திற் கொண்டு அவதானிக்க முடியும்.
- சமூகத்துடன் தொடர்புகொள்வதில் சிக்கல்.
- பேச்சு இன்மை, பேசுவதில் தாமதம் மற்றும் சிக்கல்.
- வரையறுக்கப்பட்ட கண்தொடர்பு.
- உடல் அசைவுகளை மீண்டும் மீண்டும் செய்யும் தன்மை
- உணர்திறன் சிக்கல்கள்
- சில சமயங்களில் ஆக்ரோஷமான நடத்தை.
- மாற்றங்களை விரும்பாமை.
- ஒரு சில விடயங்களில் மட்டும் அதிக ஆர்வம்.
- உணர்வுகளை வெளிப்படுத்துவதிலும் புரிந்துகொள்வதிலும் சிக்கல்.
- சமூகவிதிகளை புரிந்துகொள்ளாமை.
- நித்திரை மற்றும் உணவருந்துவதில் சிக்கல்

**ஓட்டிசத்துக்கான காரணங்கள்**

ஓட்டிசத்துக்கு பத்துக்கும் மேற்பட்ட காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அத்தகைய காரணங்களில் மிக அவதானமாக இருப்பதன்மூலம் அந்த நம்பியல் சார்ந்த சிக்கல் தன்மையை விலக்கிக்கொள்ள முடியும்.
இதன்படி ஓட்டிசம் ஏற்படுவதற்கான காரணங்களாக,

- பரம்பரை மரபணு
- தாயின் கர்ப்பகால நடவடிக்கைகள்



- அதிக மன அழுத்தம்
- மருந்துப் பாவனை
- தாயின் தைரொய்ட் அளவு குறைதல்
- தீவிரமான நோய்களுக்குள்ளாதல்
- வயது முதிர்ந்து கருத்தரித்தல்

**பிறப்பின் போது ஏற்படும் அசௌகரியங்கள்**

- குறிப்பிட்ட சில மணி நேரம் பிள்ளைக்கு அல்லது சிசுவிற்கு ஒட்சிசன் கிடைக்காமை
- சிசுவின் கழுத்தை தொப்புள்கொடி சுற்றுதல்
- பனிக்குடத்தில் நீரின் அளவு குறைதல்
- கருவிகளைப் பயன்படுத்தி சிசுவினை வெளியில் எடுக்கின்ற சந்தர்ப்பத்தில் மூளைநரம்புகள் பாதிக்கப்படுதல்
- அதிக தொலைபேசிப் பாவனை
- ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கங்கள்

**பெற்றோருக்கு...**

இந்தப் பூவுலகுக்கு ஒரு புதிய உயிரை அறிமுகம்செய்ய நினைக்கும் பெற்றோர் அவ்வுயிர் ஆரோக்கியமானதாகவும், ஆளுமைமிக்கதாகவும் எதிர்காலத்தில் மிளிர வேண்டும் என்பதில் அதிக அக்கறை மற்றும் பொறுப்புள்ளவர்களாக இருக்கவேண்டும். இதன்படி, கருவுற்ற தாயின் உடல், உள ஆரோக்கியத்தைப் பேணுதல் வேண்டும், பிறப்பின்போதான அசௌகரிகங்களைத் தவிர்த்துக்கொள்ள ஆரோக்கியமான உணவுகளை உள்ளெடுப்பதை உறுதிப்படுத்துவதுடன் சரியான உடற்பயிற்சிகளையும் மேற்கொள்ளுதல் அவசியமாகும்.
குழந்தை பிறந்ததிலிருந்து குறைந்தது 6 மாதங்களுக்கு தாய்ப்பால் கொடுக்கவேண்டும். பிள்ளை உணவு உட்கொள்ளத் தொடங்கியதும் வீட்டில் சமைக்கும் இயற்கையான சத்துள்ள உணவுகளை கொடுக்க வேண்டும். பிள்ளைகள் கையடக்கத் தொலைபேசி மடிக்கணினி போன்ற சாதனங்களுடன் நேரம் செலவிடுவதைக் கட்டுப்படுத்தவேண்டும். பிள்ளையுடன் கதைப்பதிலும் இணைந்து விளையாடுவதிலும் அதிக நேரத்தைச் செலவிடுங்கள்.
ஒன்றரை வயதுக்குப் பின்னர் பிள்ளையின் செயற்பாடுகளில் ஓட்டிசத்திற்கான அறிகுறிகள் காணப்படுமாயின் காலம் தாமதியாமல் உரிய நிபுணர்களை நாடி ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டும். (உள மருத்துவர், உளச் சிகிச்சையாளர்கள், குழந்தை மருத்துவர்)
பிள்ளைக்கு ஓட்டிசம் அல்லது வேறு ஏதும் சிக்கல் உள்ளது என அடையாளப்படுத்தப்பட்டால் தாமதமின்றி அதற்கான சிகிச்சைகளைப்பெற்றுக்கொள்ள முன்வரவேண்டும். அத்தோடு உங்கள் பிள்ளைக்கு ஓட்டிசம் என்று அடையாளம் கண்டால் பிள்ளையின் இயல்புகளோடு ஏற்றுக்கொள்ளுங்கள். அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு என்பவற்றுடன் தேவையான சிகிச்சை மற்றும் பயிற்சிகளை வழங்கி அவர்களின் தனித்துவத்தைப் பேணுவதுடன் ஆற்றல் மிக்கவர்களாக மிளிரச் செய்யுங்கள்.

*மேலதிக தகவல்களுக்கு*
*'திறனாளிகள் நிலையம்'*
*வளர்பிறை*
*இல. 5, பிளச்சஸ் ஒழுங்கை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
07
•
05
•
1936



மறைவு
10
•
04
•
2024

## தம்பிஐயா குமாரசாமி

(ஓய்வு நிலை அதிபர்)

அன்பாய் அரவணைத்து
அறிவுரைகள் பல கூறி விகடமாய் பேசி
எமையெல்லாம் மகிழ்வித்து விட்டு
எங்கு சென்றீர்கள் அப்பா.......
ஓர் ஆண்டு என்ன ஆண்டுகள் பல
சென்றாலும் என்றும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது

மீசாலை கிழக்கு,
மீசாலை.


மனைவி,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

(cr. 44711) (N-1)

# 20 ஆம் ஆண்டு நினைவலைகள்

" எத்தனையோ சரிவுகளுக்குப் பின்னும் தைரியமாய் சிரித்துக்கொண்டிருகிற எம் அப்பாவுக்கு நிகரான நம்பிக்கையூட்டும் புத்தகம் இப்பிரபஞ்சத்தில் எங்குமே இல்லை"
என்ற கூற்றிற்கு இணங்க வாழ்ந்து மறைந்த எம் இல்லத் தலைவர்
**அமரர் சங்கரப்பிள்ளை வரதராசாவிற்கான சில நினைவுத்துளிகள்**

அன்னை மகிழ
02
•
06
•
1953



அன்னை தவிக்க
10
•
04
•
2005

## அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா

(வள்ளல் வரதன்)
(நகரசபை சாவகச்சேரி)

**திதி: பூர்வபக்க துதிகை**

"தாங்கிப் பிடிக்க பல உறவுகள்
இருப்பினும் தந்தை இல்லாத
வாழ்க்கை தவிக்கத்தான் விடுகிறது"
வினாக்கள் பல பவனி வருகின்றன
விடையளிக்க அப்பா நீங்களில்லையே!

தன்னை உருக்கி பிறருக்கு ஒளி
- கொடுக்கும்
மெழுகுவர்த்தி போல்
உம்மை உருக்கி எம்மை காத்து
வந்த தெய்வமே.......
நீங்கள் எங்களோடு வாழ்ந்த
காலமெல்லாம் பொற்காலம் - நீவீர்
பிரிந்த காலமெல்லாம் எம் கண்களில்
நீர்க்கோலம்............

உலகையே எமக்கு தந்தாலும்
உமைப் போல் இணை ஆருமா
- அப்பா
உங்கள் தோளிலே சுமந்து
எங்களுக்கு உயிர் கொடுத்தீர் !

பாசமிகு தந்தையே
பார் புகழ் போற்ற பக்குவமாய்
எமை வளர்த்த பண்பாளனே
நேசத்தின் இருப்பிடமே
எம் நெஞ்சமெல்லாம்
- நிறைந்திருப்பவரே!

நீங்கள் எமக்கு ஊட்டியவைகள்
- எல்லாம்
நித்தம் நினைவில் வந்து - எமை
நெறிப்படுத்தி செல்கின்றன
நிதானமுடன் அவ்வழியே
பயணிக்கின்றோம்!


சுமை சுமந்து நின்றாலும்
பழுவளியா சுமை தாங்கியாய்
வளமான வாழ்விற்கு வழிகாட்டி
வைத்த எம் தெய்வத்தை
பிரிந்து பிரியாத நினைவுகளுடன்.

சந்நிதி இல்லம்
கைதடி கிழக்கு, கைதடி. (cs57872) (N - I)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
28
•
12
•
1952



இறப்பு
30
•
03
•
2025

## சின்னையா இராசரத்தினம் (தவம்)

(மரக்கறி வியாபாரி - யாழ்ப்பாணம்)

நாகம்மாள் கோவில் வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசரத்தினம் (தவம்) நேற்று (30.03.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - செல்வமணி தம்பதியரின் மருமகனும், பவளராணியின் (பவளம்) அன்புக் கணவரும், சுகந்தினி, ஜெசிந்தினி, சுகிர்தன், சுகிர்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரகுநாதன், சுதர்சன், சியாழினி, காலஞ்சென்ற ஜெனகசெல்வன் ஆகியோரின் மாமனாரும், ராகுல், கோகுல், அகுல், சுபர்ணன், அபிவர்ணன், வர்சானா, சாருஜன், லதுஜன், அமீர்த்தா, ஆராங்கா, ஆரணன், ஆராதனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2025) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
077 974 9343

(cs 57881) N-1

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும், நன்றி நவிலலும்

தோற்றம்
22
•
02
•
1950



மறைவு
04
•
03
•
2025

கடந்த 04.03.2025 இறையடி சேர்ந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் அம்பிகைபாகு சண்முகராஜா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (01.04.2025) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், 03.04.2025 வியாழக்கிழமை வீட்டுக்கிருத்திய கிரியைகள் முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரடியாக வருகைதந்து இறுதி அஞ்சலி செலுத்தியவர்களிற்கும், தொலைபேசி மூலமும், மலர்வளையம் சாத்தியும் பல வழிகளில் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்த அன்புள்ளங்களிற்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்


(cr.44697) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பா சுவாமிகளின் 110ஆவது குருபூஜையை முன்னிட்டு இந்தக் கட்டுரை வெளியாகிறது.

# செல்லப்பா சுவாமிகள்

# தெய்வீகத்தை உலகுக்கு அருளிய ஞானசித்தர்



**பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்**
*சைவப் பிரகாசப் பேரவையின் ஸ்தாபகர்*

சமீபகாலத்தில் உலகறிந்த மெஞ்ஞானியாக, தூய சித்தராக விளங்கியவர் யோகசுவாமிகளாவார். யோகசுவாமிகளின் குருவாக விளங்கியமை மட்டுமன்றி, யோகசுவாமிகள் வாயிலாக இந்த உலகுக்கு தெய்வீகத்தை அருளிய ஞானசித்தராக விளங்கியவர் நல்லூர் தேரடிச்சித்தர் எனும் செல்லப்பா சுவாமிகளாவார். 1860ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவருக்கும் நல்லூரைச் சேர்ந்த பொன்னம்மா என்பவருக்கும் மகனாக செல்லப்பா சுவாமிகள் பிறந்தார்.

செல்லப்பா சுவாமிகள் இளமையிலே தெய்வீகநாட்டம் கொண்டு குடும்பத்தை விட்டு தம் வீட்டுக்கு மிக அண்மையில் இருந்த நல்லூர்க் கந்தசுவாமியாரை வழிபட்டுக்கொண்டு தேரடியிலேயே இருந்திருக்கிறார். 'உலகம் உறங்கும்போது ஞானி விழித்திருப்பான்' என்ற கோட்பாட்டிற்கு அமைய நடுச்சாம வேளையில் நல்லைக்கந்தன் ஆலயம் முன்னே நின்று முருகனை அழைத்து வணங்கி அருள் பெறுவார். யோகசுவாமிகளின் சீடர்களின் மிக்க முதன்மை உடையவர் என எல்லோராலும் அறியப்பெற்றிருக்கும் செல்லத்துரை சுவாமிகள், பல சந்தர்ப்பங்களில் செல்லப்பா சுவாமிகள் நல்லூர்க்கந்தன் அருள்பெற்றவர் என்றும் அக்காலத்தில் கடையிற் சுவாமிகளும் அவரும் ஓரிருமுறை சந்தித்திருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

கொழும்புத்துறை திருஞானசம்பந்தர், இராமலிங்கம், துரையப்பா, முருகேசு, கந்தர்மடத்து ஆறுமுகம், இளையதம்பி, தம்பித்துரை முதலானோர் செல்லப்பா சுவாமிகளின் மகிமையை அறிந்து அவரை அண்டி வணங்கி அவருக்கு பணிவிடை புரிந்தனர். இப்படியான நிலை உண்டானபோதும் சாதாரண பொதுமக்கள் தன்னை நெருங்காத வண்ணம் விசர் செல்லப்பராகவே விளங்கியிருந்தார். இந்தத் திறமை பற்றி இவர் சீடரான யோகசுவாமிகளே ஒருமுறை 'நாற்பது வருடகாலமாக விசர் நாடகத்தை திறமையாக நடத்தியிருக்கிறார்' என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

உலகில் ஆங்காங்கு தோன்றிய ஞானியரில் பலர்தாமே அருட்செயல்களைப் புரிந்து உலகம்வரை ஈடேற்றுபவர்களாகவும் தம் சீடர் வழியில் அருட்செயல்களைப் புரிந்து உலகமக்களை உய்விப்பவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். செல்லப்பா சுவாமிகள் இராமகிருஸ்ணர் முதலியோர் தம் சீடர்கள் மூலம் உலகமக்களை உய்ய அருளியதை அவதானிக்க முடிகின்றது.

சைவசித்தாந்த நூல்களில் தலைமை பெற்றதாகவும் மிக விரிவாக அமைந்ததாகவும் 'சிவஞான சித்தியார்' உள்ளது. இதில் ஞானிகள் விதிவிலக்குகளுக்கு அப்பாற்பட்டவர்கள் ஆவர் என்ற கருத்துத் தெளிவாக்கப்பட்டுள்ளது. சிவஞானசித்தியார் 284ஆம் பாடலில் 'பாலருடன் உண்மத்தர் பசார்குணம் மருவி பாடலினோடு ஆடல் இவை பயின்டினும் பயில்வர்' என்று உள்ளது. ஞானியர் சிறு குழந்தைகள் போலவும் பைத்தியம் பிடித்தவர் போலும் பேயால் பீடிக்கப்பட்டவர் போலவும் பாடியும் ஆடியும் செயற்படுவர் என்பது சிவஞானசித்தியாரின் கருத்தாகும். செல்லப்பா சுவாமிகளும் அவ்வாறே வெளியுலகுக்கு விசரனாகவும், ஆன்ம ஈடேற்றம் கருதிய பெரியோர்க்கு ஞானியாகவும் காட்சியளித்தார். தமது ஞானத்தால் பின்னால் அமையப்போகும் நல்லது கெட்டதுகளை முன்னதாகவே நன்குணர்ந்தறியும் ஆற்றலுடையவராகத் திகழ்ந்தார்.

காற்படி அரிசியை சமைத்து நால்வருக்குப் போதுமானளவு உணவு வழங்கிய அற்புதங்களைப் புரிந்தார். 'ஒரு பொல்லாப்புமில்லை', 'முழுவதும் உண்மை', 'ஆரறிவார்', 'எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்' போன்ற ஆத்ம வாக்கியங்களை உலகமெல்லாம் ஒலிக்கச் செய்து 1915ஆம் ஆண்டு பங்குனி மாத அச்சுவினி நட்சத்திரத்தில் வெள்ளிக்கிழமை இரவுவேளை மகாசமாதி நிலையடைந்தார்.

சுவாமிகள் அருள்பெற்ற யோகசுவாமிகள் எண்ணில்லாத அன்பர்கள் பொருட்டு எண்ணில்லாத அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறார். அவர் நிகழ்த்திய அற்புதங்களில் சில நூல் வடிவிலும் உள்ளன. இந்த அற்புதங்களைப் படித்தறிவோர் அவரோடு பழகி நன்மையடைய இயலவில்லையே என ஏங்குவதும் இயல்பே. இப்படியான ஏக்கத்தை முற்றாகப் போக்கும் கருணையுடன் யோகர்சுவாமிகள் நற்சிந்தனை எனும் அருட்பாடல்களை வழங்கியிருக்கிறார். மகிமைமிக்க நற்சிந்தனைப் பாடல்களில் செல்லப்பா சுவாமிகளைப் பற்றி அதிகமாகவும் தெளிவாகவும் யோகசுவாமிகள் அருளியிருக்கிறார்.

*ஐயனே சற்குருநாதா - உனை*
*அண்டிவந்தேன் அருள் தா தா*
*சஞ்சல மிகவும் மிஞ்சுதே சற்குருநாதா*
*தமியேனை ஆளவேண்டும் என்பன போலும்.*

நாமெல்லாம் நற்சிந்தனை மூலம் செல்லப்பா சுவாமிகளை வணங்கி அருள்பெறவேண்டும்' என யோகசுவாமிகள் விரும்புவதையே காண்பிக்கின்றன. செல்லப்பா சுவாமிகளின் பெருமை, தோற்றம் அவரை வணங்குவதன் பயன் முதலிய பல உயர்ந்த கருத்துகளை நற்சிந்தனை மூலம் அறியமுடிகின்றது. இத்துடன் யோகசுவாமிகள் தன் குரு செல்லப்பா சுவாமிகளை எங்ஙனம் வணங்கியுள்ளார், எங்ஙனம் நமக்கெல்லாம் அறிமுகப்படுத்தியிருக்கிறார் என்பதை அவரின் நற்சிந்தனைமூலம் அறிந்து பணிந்து நம்மை நாமே பாக்கியவான்களாக்கவேண்டும்.

# சித்தர் சடையம்மா சுவாமிகளுக்கு 170 ஆண்டுகளின் பின் திருக்கோவில்

**கலாநிதி சின்னத்தம்பி பத்மராஜா**

**ஈழத்தின் முதல் பெண் சித்தர் சடையம்மாவுக்கு திருநெல்வேலி கிழக்கில் திருக்கோவில் அமைக்கப்பட்டு திருவுருவச் சிலை பிரதிஷ்டை இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது. இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**



திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.15 மணி முதல் 10.40 வரையான சுபமுகூர்த்த நன்னாளில் நடைபெறவுள்ளது. இதன் சிறப்பம்சமாக ஈழத்தின் முதல் பெண் சித்தர் யாழ்ப்பாணத்து நல்லூர் சடையம்மா சுவாமிகளுக்கு புதிதாக ஆலயம் அமைக்கப்பட்டு அவரது திருவுருவச்சிலை பிரதிஷ்டையும் இடம்பெறவுள்ளது. சித்தர் சடையம்மா சுவாமிகள் அவதரித்த ஊரில் 170 ஆண்டுகளின் பின்னர் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும்.

சடையம்மா சுவாமிகள், 1985ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி ரோகினி நட்சத்திரத்திலே வீரகத்திப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளாக முத்துப்பிள்ளை எனும் பிள்ளைத் திருநாமத்துடன் அவதரித்தார். தனது 11ஆவது வயதிலே நந்தி கோத்திரத்தை சேர்ந்த கதிரேசு என்பவரை திருமணம் செய்து இல்லறவாழ்வை ஆரம்பித்தார். இவரது கணவர் நோய்வாய்ப்பட, அது நீங்க நல்லூரான் வாசல் சென்று அவனையே தஞ்சம் எனக் கொண்டு அங்கேயே தங்கியிருந்து சரியைத் தொண்டாற்றினார்.

இக்காலத்திலே காசி, இராமேஸ்வரம், முதலாய தென்னிந்திய திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு இயற்றி கங்கை, காவேரி, சரஸ்வதி ஆகிய திரிவேணி சங்கமத்திலே புனித தீர்த்தமாடி ஆன்மீக அறிவு கைவரப்பெற்று பதிஞானம், பசு ஞானம் பெற்று அது முதிரப்பெற்று ஞானயோகியானார். மெல்லமெல்ல இல்லற வாழ்வை நீக்கி துறவற வாழ்வை ஏற்கும் நாளில் வாலையம்மனின் அருட்பார்வையால் யோகம் கைவரப்பெற்றார்.

## துறவு பூணுதல்

இந்நிலையில் தன் மாங்கல்யத்தை கழற்றி கணவனிடம் கையளித்து குடும்ப வாழ்வைத் துறந்து மக்கள் பணி ஆற்றத் தலைப்பட்டு சமூக நோக்கோடு நல்லூர் தேரடிமடம், கதிர்காம மடம், கீரிமலை மடம் முதலியவற்றை ஈழத்திலும் கடல் கடந்து திருச்செந்தூர் சென்று அங்கேயும் மடம் அமைத்து பசித்தோர் முகம் பார்த்து அன்னதானப் பணிபுரிந்தார். நாடிவரும் அடியவர் தம் மனக் கவலைகளை நீக்கினார். இந்நிலையில் அடிக்கடி தியானநிலைக்குச் சென்றுவரும் இவர் ஈழத்து சித்தர் பரம்பரையின் மூலவர் ஆகிய கடையிற் சுவாமிகளிடமும் பால்குடி பாபா சுவாமி களிடமும் தீட்சை பெற்று அவர்களையே குருவாக ஏற்று முற்றும் துறந்த ஞானி ஆகினார். இந்நிலையில் அடிக்கடி தலை வீங்கும். இவரின் யோகம் அடங்க தலை வீக்கம் குறையும். இந்நிலையில் தலைமுடி நீண்டு நிலத்தைத் தொடும் அளவு வளர்ந்து சென்றதால் அடியவர்கள் இவரை சடையம்மா என அழைத்தனர். மன ஒருமைப்பாட்டுடன் கடையிற் சுவாமியின் குருவுபதேசமாகிய 'கந்தனை மறவாதே அவனே நமது சொந்தம்' என்பதை ஏற்று முருக பக்தையாகினார்.

## சமாதியாதல்!

இத்தனை சிறப்புமிக்க இவர் 1936ஆம் ஆண்டு சுக்கிரவார அனுச நட்சத்திரமன்று தான் ஏற்கனவே கூறியபடி உச்சி வீங்கி தலை பிளந்து சமாதியானார். யோகர் சுவாமிகளின் தலைமையிலே கீரிமலையிலே கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு நிலத்தின் கீழே உள்ள நிலக்கீழ் அறையில் இவரின் சமாதி வைக்கப்பட்டது. இவரது சடையின் ஒரு பகுதி எடுக்கப்பட்டு கதிர்காமம், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் சமாதி வைக்கப்பட்டது. தற்போது உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள இவரது சமாதியானது எவ்வித சேதமுமின்றி அப்படியே காட்சியளிக்கிறது. இவரது சமாதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருவுருவச் சிலைகள் பாதுகாப்பாக ஓரிடத்திலே இருப்பதாக அறியமுடிகின்றது. இவரது மடங்கள் இயங்க முடியாமலும், பெயர் மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டுமுள்ளன. இது சைவத்தமிழ் உலகுக்குப் பெரும் இழுக்கானது. இந்நிலையில் நல்லூர் சடையம்மா மடத்திலே பணியாற்றிய பௌராணிகர் சி.தம்பிஜயாவால் 1975ஆம் ஆண்டளவில் அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்திலே கொட்டகை அமைத்து அவரின் பணிகளை ஆற்றி 63 மெய்யடியார்களதும் 9 தொகை அடியார்களதும் குருபூசைகளை நடத்தி வந்தார். 2000ஆம் ஆண்டு இந்த மடம் விஸ்தரிக்கப்பட்டு நடராசா வாத்தியாரால் திறந்து வைக்கப்பட்டது.

நாளொரு வண்ணமும் இப்பணி வளர்ச்சியுற்று 2025ஆம் ஆண்டிலே லிங்கம் அறக்கட்டளை ஸ்தாபகரது பேருதவியால் முதன் முதலில் சடையம்மாவிற்கு ஆலயம் அமைக்கப்பட்டு சடையம்மாவின் சமாதிமண் எடுத்துவரப்பட்டு அதன்மீது சடையம்மா சுவாமிகளின் கருங்கல்லினாலான திருவுருவச் சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது.

ஈழத்துக்கும் நல்லூருக்கும் பெருமைசேர்ந்த ஒரு பெண்ணாக சைவத் தமிழ் உலகு ஏற்று அவரின் பணியை வெளிக்கொணர்ந்து அவர் வழி பயணிப்பது காலத்தின் தேவை எனலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சிக்கு இலக்கணம் தேசிய மக்கள் சக்தி அரசு!

## ஜனாதிபதி அநுர புகழாரம்

நல்லாட்சிக்கு இலக்கணமாகவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் எதிர்காலத்தை வளப்படுத்தும் வகையில் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நாங்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். அரசாங்கம் என்றால் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு இலக்கணமாக எங்களின் ஆட்சி அமைந்துள்ளது. எங்களைத் தெரிவுசெய்தமைக்காக மக்கள் பெருமைப்படும் சூழல் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.
இன்று எமக்கெதிராக சிலர் கடுமையான விமர்ச னங்களை முன்வைத்துவருகின்றனர்.
எம்மை விமர்சிப்பவர்கள் எங்கிருக்கிறார்கள்? தொலைக்காட்சியின் முன்னால் அமர்ந்தவாறு எம்மை விமர்சிக்கின்றனர். ஏனெனில், தமது வாழ்நாளில் இவ்வாறான மோசமாக தோல்வியைச் சந்திப்பார்கள் என அவர்கள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. பல தசாப்தங்களுக்குப் பின்னர் ஊழல் மோசடி இல்லாத மக்கள் சார்பான அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

# உள்ளூராட்சித் தேர்தல் 180 முறைப்பாடுகள்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இதுவரையில் 180 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
கடந்த 20 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே குறித்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 179 முறைப்பாடுகளும் வன்முறைச் சம்பவம் தொடர்பில் ஒரு முறைப்பாடும் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த முறைப்பாடுகளில் 133 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், ஏனைய 47 முறைப்பாடுகளுக்குத் தீர்வுகாணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)


## வீட்டுடன் காணி விற்பனைக்கு

புத்தூர் கனகம்புளியடிச் சந்தி பிரதான வீதியில் (பண்றித்தலைச்சி அம்மன் வீதி) மருதடி பிள்ளையார் கோவிலுக்கு அருகில் பிரதான வீதியைமுகப்பாக கொண்ட 4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

Whatsapp:- +3934 823 60063 (செல்வரஞ்சினி)
இலங்கை நேரம்: 7.00 p.m - 10 .00 p.m

(cs 57837) (N-1)



விண்ணக வாழ்வின்

## பதினேழாம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 20.06.1938
இறப்பு 31.03.2008



அமரர்

### சுப்பிரமணியம் யோசேப் பூராசா


(ஓய்வுபெற்ற அதிபர், முன்னாள் செயலாளர் - புனித அந்தோனியார் ஆலயம், முன்னாள் இயக்குநர் - புனித அந்தோனியார் தெய்வக் குழந்தைகள் இல்லம்)

"வாழ்ந்தாலும் இறந்தாலும்
நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்"
(உரோ : 14:8)

புங்குடுதீவு - 2

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs.57844) (N-1)

### யாழ். -...

பின்னர் இந்தியாவின் உதவியுடன் சீரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் விமான நிலையம், 2019 ஆம் ஆண்டு பயணிகள் சேவைக்காகத் திறக்கப்பட்டது. யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இருந்து தமிழ்நாட்டின் சென்னைக்கு விமான சேவைகள் இயக்கப்பட்டன. தற்போது இந்தப் பயணிகள் விமான சேவை நாள்தோறும் இயக்கப்படுகின்றது.
தற்போது தமிழ்நாட்டின் திருச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இண்டிகோ விமான நிறுவனம் இந்த விமான சேவையை நேற்றுமுதல் ஆரம்பித்துள்ளது. 47 ஆண்டுகளின் பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து திருச்சிக்கு நேரடி விமான சேவைகள் நடைபெறும் சந்தர்ப்பம் இதுவாகும்.
இதுவரை கொழும்பில் இருந்தே திருச்சிக்கு விமான சேவைகள் நடைபெற்று வந்தன. நாள்தோறும் இரு விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில் வளைகுடா நாடுகளுக்குச் செல்வோர் இந்த விமான சேவைகளை அதிகம் பயன்படுத்தி வந்தனர். தற்போது யாழ்ப்பாணத்தில் இருந்து திருச்சிக்கு நேரடியாக விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் குறைந்த செலவில் பயணிக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளனஎன்றுசுட்டிக்காட்டப்படுகின்றது.
திருச்சியில் இருந்து பிற்பகல் 1.25 மணிக்குப் புறப்படும் விமானம், பிற்பகல் 2.25 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும். யாழ்ப்பாணத்தில் இருந்து பிற்பகல் 3.05 மணிக்குப் புறப்படும் விமானம் மாலை 4.05 மணிக்குத் திருச்சியைச் சென்றடையும்.
நேற்றுப் பிற்பகல் 2.05 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த விமானத்தில் 27 பயணிகள் வந்திருந்தனர். யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இருந்து பிற்பகல் 3 மணிக்குப் புறப்பட்ட விமானத்தில் 36 பயணிகள் பயணித்தனர்.
யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் விமான நிலையத்தில் இந்தப் புதிய விமான சேவை ஆரம்பித்துள்ளமையை கேக் வெட்டிக் கொண்டாடினர். (அ-எ-26)

### 4 மாதங்களில்...

சிவில் போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க யாழ்ப்பாண விமான நிலையத்துக்கு நேற்றுத் திடீரெனக் களப்பயணம் மேற்கொண்டிருந்தார். விமான நிலையத் தைப் பார்வையிட்ட அமைச்சர், விமான நிலையத்தின் விஸ்தரிப்புகள் தொடர்பாகவும், நடைபெறும் சேவைகள் தொடர்பாகவும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.
யாழ்ப்பாணம் விமான நிலையம் செப்ரெம்பர் மாதத்துக்குள் சர்வதேச விமான நிலையமான மாற்றியமைக்கப்படும். விமான நிலையத்தின் திட்டமிடல் வரைபடம் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. முந்தைய அரசாங்கங்களைப் போன்று நாம் பொய்கூறமாட்டோம். யாழ்ப்பாணம் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைக்கப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (அ-எ-26)


## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 07 . 1954



மறைவு 30 . 03 . 2025

### வேலாயுதபிள்ளை குசேந்திரன்

இல 86, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை குசேந்திரன் அவர்கள் (30.03.2025) அன்று ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் வேலாயுதபிள்ளை செல்வமணி தம்பதியின் இளைய மகனும் வேலாயுதபிள்ளை லவனேஸ்வரன் அன்புச் சகோதரனும் லவனேஸ்வரன் கிருபானந்தகுமாரியின் மைத்துனரும் கோவிந்தன் கோணேஸ்வரனின் உடன்பிறவா சகோதரனும் வைஸ்ணவி, ஐஸ்வர்யா ஆகியோரின் சித்தப்பாவும் ஜனகனின் அன்பு மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.04.2025) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
லவனேஸ்வரன் குடும்பத்தினர்
கோணேஸ்வரன்
077 432 2874, 077 049 7480

(CS 29947) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேரியாத்...

சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த 28ஆம் திகதி தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் தென்னாபிரிக்கா சென்று வந்த நிலையில் மலேரியாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. அண்மைய நாள்களில் மலேரியாத் தொற்றுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இரண்டாவது நபர் இவராவார்.

வெளிநாடு சென்று திரும்புவோர், முக்கியமாக ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்று திரும்புவோர் மலேரியாப் பரிசோதனைகள் மேற்கொள்வதும், தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளதும் அவசியம் என்று சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர். (அ-எ-இ)

## காய்ச்சலால்...

தைக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டிருந்த நிலையில், 28ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அதையடுத்து குழந்தையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். குழந்தை நேற்று உயிரிழந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## 'ஈஸ்டர்'...

தொடர்பில் மட்டும் அல்ல குற்றங்கள் சம்பந்தமாகவும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முறையாக இடம்பெற்றுவருகின்றன.

எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் மீண்டும் நினைவுகூரப்படும். ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய குழுவைப் பகிரங்கப்படுத்துவதற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முயற்சித்துவருகின்றனர். அதை நாம் கட்டாயம் செய்யவேண்டும்.

அதேவேளை, முன்னாள் அமைச்சர்கள் மூவர் சிறையில் இருக்கின்றனர். மேலும் ஒருவர் மாயமாகியுள்ளார். முன்னாள் பொலிஸ்மா அதிபரும் சிறையில் இருக்கின்றார். இந்த நாட்டை குற்ற நாடாக மாற்றுவதற்கே கடந்த காலங்களில் முற்பட்டுள்ளனர். எனவே, அடுத்து வரும் நாள்களில் சிறப்பான செய்திகள் காத்திருக்கின்றன. ஊழல்,மோசடிகளில் ஈடுபட்ட தரப்பினர் மற்றும் அவர்களை பாதுகாத்த தரப்பினர்தான் தற்போது ஊடகங்கள் முன்னிலையில் கதறிவருகின்றனர். ஏனெனில் தாம் செய்த குற்றங்களின் தன்மை அவர்களுக்கு நன்கு தெரியும் - என்றார். (அ-எ-44)


# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 08 . 1936

மறைவு
30 . 03 . 2025



## சுப்பிரமணியம் இரட்ணம்

**(ஓய்வு பெற்ற கடற்படை உத்தியோகத்தர்/ T.V திருத்துனர்)**

கண்டிவீதி, கச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரட்ணம் அவர்கள் நேற்று (30.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மரகதம் தம்பதியின் அன்பு மகனும், இரத்தினம் - இரத்தினம் தம்பதியின் அன்பு மருமகனும், வசுந்திராதேவி (பாப்பா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நடராஜா, மார்க்கண்டு புஸ்பவதி, கந்தசாமி பவளராணி மற்றும் நகுலேஸ்வரன் கமலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், வித்தியா (ஆசிரியை யா/நாவற்குளி மகாவித்தியாலயம்), சுதர்ஷன் (மகப்பேற்று வைத்திய நிபுணர் - கிளிநொச்சி), யசிந்தன் (மின் பாவனையாளர் சேவை நிலையம், யாழ் நகரம்), தாட்சாயினி அவர்களின் அன்புத் தந்தையும், ஜெயசுரேஸ் (ஆசிரியர் யா/கைதடி முத்துக்குமார சுவாமி), நிறோஜினி (மருந்தாளர்), தர்ஷிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலர்), யூட்சுதர்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் , யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷாலினி, அனுஸ்கா, அரிஷ்ணன், ஆயகி, அஷ்மிதா, ஆரோன்ஜெய், ஆதர்ஷன், அபிஷாந், ஆகிஷன், ஆத்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (31.03.2025) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் பி.ப 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**117, கண்டி வீதி,**
**கச்சேரியடி, யாழ்ப்பாணம்.** *CS/29946) J-1

**தகவல்: குடும்பத்தினர்**
**077 662 1703, 077 923 2310**


## கழிவு...

பெற்றது. அந்தக் கூட்டத்திலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான சந்தைகளில் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கு 10 சதவீதக் கழிவு அறவிடப்படுவது தொடர்பான விவகாரம் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் ஆராயப்பட்டது என்று சுட்டிக்காட்டிய ஆளுநர், கடந்த கூட்டத்தில் இது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை தொடர்பாக பரிந்துரைக்கக் கோரப்பட்டிருந்ததை நினைவுபடுத்தினார்.

கடந்த 5 ஆண்டுகளாக சந்தையை வழங்கிய குத்தகையின் சராசரிப் பெறுமதியைக் கணிப்பிட்டு அந்தத் தொகைக்கு விவசாய சம்மேளனங்களுக்கு சந்தைக் குத்தகையை ஆளுநரின் விசேட அனுமதியுடன் வழங்கலாம் என்ற யோசனை கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. விவசாய சம்மேளனங்களே சந்தையை குத்தகை எடுத்தால் இத்தகைய கழிவுப் பிரச்சினைகள் எதிர்காலத்தில் எழாது என்று உள்ளூராட்சிமன்றங்களின் செயலர்கள் குறிப்பிட்டனர்.

இல்லாவிடின் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் சந்தைகளில் நேரடியாகக் கண்காணிப்பில் ஈடுபடலாம் என்றும் அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளை உள்ளூராட்சிமன்றங்கள் வழங்கத்தயாராகவுள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர். அடுத்த ஆண்டுக்காக குத்தகை வழங்குவதற்கு முன்னர் தொடர்புடைய விவசாய சம்மேளனங்கள் இவற்றில் தெரிந்தெடுத்தாலும் அதை நடைமுறைப்படுத்தமுடியும் என உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் தெரிவித்தனர். அதேவேளை, சகல சந்தைகளிலும் ஏனைய சந்தைகளின் முதல் நாள் மரக்கறிகளின் விலைகளை 'டிஜிட்டல்' திரை மூலம் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஆளுநர் அறிவுறுத்தினார். (அ-எ-26)

## கையூட்டு...

குடும்பப் பிணக்குத் தொடர்பான வழக்கொன்றில் இருந்து தன்னை விடுவிக்கக் கோரி தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு 50 ஆயிரம் ரூபா கையூட்டுக் கொடுக்க முயன்றார். அப்போதே பொலிஸ் நிலையத்தில் வைத்து பொறுப்பதிகாரியால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (அ-எ-113)

## புகுமுக...

துக்கு நடந்து சென்றுகொண்டிருந்த புகுமுக மாணவனை விரிவுரைக்குச் செல்லவிடாது தடுத்த சிரேஷ்ட மாணவர்கள் சிலர், கட்டாயப்படுத்தி மோட்டார்சைக்கிளில் ஏற்றி தனியார் மாணவ விடுதி ஒன்றுக்குக் கொண்டுசென்றுள்ளனர். அங்கு இந்த மாணவனையும், வேறு சில புகுமுக மாணவர்களையும் சிரேஷ்ட மாணவர்கள் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கியுள்ளனர். சிரேஷ்ட மாணவர்கள் ஹெல்மெட்டால் தாக்கியதில் குறித்த புகுமுக மாணவன் காது கேட்கும் திறனை இழந்துள்ளான்.

தாக்குதல் காரணமாக மயக்கமடைந்த மாணவனுக்குக் கட்டாயப்படுத்தி பனடோல் பருக்கிய பின்னர், தனியார் விடுதியில் இருந்து சிரேஷ்ட மாணவர்கள் விரட்டியுள்ளனர். அந்த மாணவன் கூகிள் வரைபட உதவியுடன் பல்கலைக்கழக விடுதிக்குச் சென்று, அங்கிருந்து அம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனை சென்று சிகிச்சை பெறுகின்றார் என்று பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தை தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள தனது மகனுக்குப் பாதுகாப்பளிக்கவேண்டும் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பாக நீதியானதும், சுதந்திரமானதுமான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் என்று கோரியுள்ள மாணவனின் தந்தை, இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழுவால் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் மேற்கொண்ட முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-26)

## விபத்தில்...

துள்ளார். யாழ்ப்பாணம் - அரசடி வீதியைச் சேர்ந்த வேலாயுதம்பிள்ளை உசேந்திரா (வயது-70) என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த 29ஆம் திகதி தட்டாதெருச் சந்திப் பகுதியில் சைக்கிளில் பயணித்தபோது மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகினார்.

விபத்தில் காயமடைந்த இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தநிலையில் நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## விபத்தில் சிக்கிய...

ஜெயரத்தினம் சசிலா (வயது-57) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

சிறையில் உள்ள தனது கணவருக்கு உணவு கொடுப்பதற்காக கடந்த 13ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்றபோது, மற்றொரு மோட்டார் சைக்கிள் பின்புறமாக மோதியதில் இவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த இவர் நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## சிறுமியுடன்...

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. விளையாடிக்கொண்டிருந்த சிறுமியின் அருகில் சென்ற இரு பெண்கள் சிறுமியுடன் உரையாடியுள்ளனர். பின்னர் அவர்கள் சிறுமியின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு அங்கிருந்து நழுவிச்சென்றுள்ளனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

கலந்துகொண்டனர் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குத் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் சென்று ஆய்வுகளை மேற்கொண்டனர். இது தொடர்பாக வலிகாமம் மேற்குப் பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும், விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(அ-எ-125)



## காணி விற்பனைக்கு

**உரும்பிராய் வடக்கில் 13 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு**

* இரண்டு பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 1 பரப்பின் விலை (1500000) பதின் ஐந்து இலட்சம் ரூபாய்.
* சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமை குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
* செம்மண் நண்ணீர் ஊற்று நிலப்பரப்பு 20 அடி பாதை.
* உரும்பிராய் இந்துக் கல்லூரி **1 KM** தூரம்
* உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவில் **1 1/2 KM** தூரம்.
* தரகர் தேவையில்லை.

**தொடர்பு: 077 038 5455
077 468 3354**

(CS 29950) V

## வாடகைக்கு

**இடம்:** திருநெல்வேலி சந்தி பலாலி வீதி, 11 அடி அகலம், 30+10 அடி நீளம் கடை

➤ மேல் மாடி பகுதி 3 அறைகளுடன் சேர்ந்த வீடு

➤ வாகன தரிப்பிடம் உண்டு

தொடர்புகளுக்கு:
**0044 774 676 7277, 077 818 4875**

## காணி விற்பனைக்குண்டு

கோப்பாய்-உரும்பிராய்
பிரதான வீதியில்
3 பரப்புக்காணி விற்பனைக்கு
உள்ளது.

தொடர்பு: **070 665 9778**

## Techna
Technical Institute

THE BEST QUALITY EDUCATION FOR TECHNOLOGY STREAM

Technatechnicalinstitute

**A/L தொழினுட்பப்பிரிவு**

**புதிய கல்வியாண்டு**

# A/L 2027

**அனுமதி: 01.04.2025 செவ்வாய், காலை 10.45 மணிக்கு.**

077 170 3549 வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

## INFORMATION TECHNOLOGY PARK

*Jaffna, Srilanka*
*Under the purview of the*
*Ministry of Digital Economy*

MPCS Building
127, K.k.S.Road, Jaffna, Srilanka

Office :- 021 222 3641
Fax No :- 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

**APRIL BATCH**

- *Dip.in Microsoft Office*
- *Dip.in Desktop publishing*
- *Dip.in information Technology*
- *Dip.in Computer Programming*

-06 Month-

**Online Course**

- *Dip.in PC Application & Office Management*

-06 Month-

**Languages**

- *VB.net*
- *PHP*
- *C/C++*
- *C#*
- *Java*
- *AotoCAD*

-06 Month-

**Workshops**

- *Internet & e-mail*
- *Webpage Designing & Development*

-20 Hours-

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 21.04.2025
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் :- 19.04.2025

*CENTRE FOR INFORMATION TECHNOLOGY*

- OFFICER IN CHARGE -



## 5ஆம் வருட நிறைவு தினம்



தோற்றம்
13 . 11 . 1956

நிறைவு
26 . 03 . 2020

"ஈச்சமோட்டையின் தத்துவஞானி"
என்று சான்றோர்களால் அழைக்கப்பட்ட

**சத்தியானந்தசிவம் தவசீலன் (தவம்) J.P**

**திதி: பங்குனி மாத வளர்பிறை திருதியை**

ஐந்திணை கொண்டு ஐயமின்றி வாழ்ந்து
விண்ணுலகம் சென்று ஐந்தாண்டு ஓடிவிட்டதோ.....!
ஐந்து வினாடி போல் தோன்றுகின்றதே....
ஐந்தல்ல ஐம்பது ஆண்டுகள் சென்றாலும்
உம் வழியில் எம் பணி என்றென்றும் தொடரும்.....

"அன்பே சிவம்"
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

(cs.2826) (N-1)



சித்திரைப்
புத்தாண்டை முன்னிட்டு
விசேட விலைகளில்

NALIN Information Technologies(Pvt)Ltd
Computers of the North

3C 2V COXIAL CABLE 100M IS FREE




எங்கும் இல்லாத விலைக் கழிவில்...

மேலதிக விபரங்களிற்கு
077 766 7975

- HIKVISION DVR DS-7104HGHI-M1 (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE16D0T-EXLPF (02 YEARS WARRANTY) 4
- 3U DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) 1 (4)
- 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) 8
- METAL BNC CONNECTOR 1

**Rs. 48000.00**

- HIKVISION DVR DS-7108HGHI-M1 (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE16D0T-EXLPF (02 YEARS WARRANTY) 8
- 3U 400MM DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) 1 (8)
- 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) 16
- METAL BNC CONNECTOR 1

**Rs. 69000.00**

- HIKVISION DVR DS-7104HGHI-M1 (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE10DF0T-PFS (02 YEARS WARRANTY) 4
- 3U DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) 1 (4)
- 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) 8
- METAL BNC CONNECTOR 1

**Rs. 52000.00**

- HIKVISION DVR DS-7108HGHI-M1 (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE10DF0T-PFS (02 YEARS WARRANTY) 8
- 3U DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) 1 (8)
- 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) 16
- METAL BNC CONNECTOR 1

**Rs. 82000.00**

- HIKVISION DVR IDS-7104HGHI-M1/S (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE10DF3T-LPFS (02 YEARS WARRANTY) 4
- 3U 400MM DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) 1 (4)
- 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) 8
- METAL BNC CONNECTOR 1

**Rs. 68000.00**

- HIKVISION DVR IDS-7108HGHI-M1/S (02 YEARS WARRANTY) 1
- HIKVISION CAMERA DS-2CE10KF0T-LPFS (02 YEARS WARRANTY) 8
- 3U 400MM DVR CABINET 1
- SEAGATE SKYHAWK 1TB HDD (01 YEAR WARRANTY) 1 (8)
- 12V 2A POWER PACK (CHECKING WARRANTY) 16
- METAL BNC CONNECTOR 1

**Rs. 113000.00**

Follow us: facebook/nalin it www.nalinit.lk nalin@nit.lk

| | | |
|---|---|---|
| JAFFNA | 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna. | 077 766 7975 / 021 222 1121 |
| KILINOCHCHI | No.44, A9 Road, Central College Opposite, Kilinochchi. | 076 359 7610 / 021 228 5550 |
| MANNAR | No.208A, Hospital Road, Mannar. | 076 359 4368 / 023 222 2500 |
| NALIN IT EXCLUSIVE | No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC) | 076 359 4359 / 021 221 0404 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.03. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.